

## எமது தேசத்திற்கும் அதனது மக்களுக்கும் செழுமையை பெற்றுத்தர நாம் ஒரு பயணத்தில் இருக்கின்றோம். நீங்கள் அதனொரு பங்காளராக இருக்க விரும்புகிறீர்களா ???

நாடு முழுவதும் 272 கிளைகளையுடைய இலங்கையின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடத்திற்குத் தேவையான தகைமைகளுடன், சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட தொழில் வல்லுநர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

# பிரதான தகவல் அதிகாரி (CIO)

**முக்கிய தேவைகள்**

பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- பல்கலைக்கழகங்கள் மானிய சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது பொறியியல் அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பட்டத்துடன் பல்கலைக்கழக மானிய சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த துறையிலான பட்டப்பின் படிப்பு அல்லது பட்டப்பின் டிப்ளோமா காணப்படல்.

பல்கலைக்கழக மானிய சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையிலான பட்டப்பின் படிப்பு தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்படும்.

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் செயற்பாடுகள் தொடர்பில் 12 வருடங்களிலான முன்னனுபவத்துடன் அதில் குறைந் பட்சம் 08 வருடங்களிலான சிரேஷ்ட முகாமைத்துவ (பிரதான முகாமையாளர் அல்லது அதற்கு மேற்பட்ட அதில் 05 வருடங்கள் உதவிப்பொது முகாமையாளர் அல்லது அதற்கு மேற்பட்ட) மட்டத்திலான முன்னனுபவம் வங்கியொன்றிலோ அல்லது நிதி நிறுவனத்திலோ பெற்றிருத்தல்.

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நடவடிக்கைகள் தொடர்பில் நிபுணத்துவம் மற்றும் நவீன வங்கியியல் தொழில்நுட்ப வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வு

- வங்கி வணிக நடவடிக்கைகளில் தன்னிச்சையான செயற்பாடுகள் தொடர்பில் கருத்தியல் ரீதியான இயலுமை மற்றும் அவற்றை மேம்படுத்தும் இயலுமையினைக் கொண்டிருத்தல்.

- வயது- 57 வருடங்களுக்கு குறைவானதாக இருத்தல் வேண்டும்.

**சம்பளம்/கொடுப்பனவுகள்**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு வங்கித்துறையில் நிலவும் கவர்ச்சிகரமான கொடுப்பனவுகளுடனான சம்பளப் பொதியானது பெற்றுக் கொடுக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

பூர்த்தி செய்யப்பட்ட உங்களது முழுமையான சுயவிபரக் கோவையை, உறவினரல்லாத சிபாரிசு செய்யும் இருவரின் தொடர்பு விபரங்களுடன் 2026 ஏப்ரல் மாதம் 18ம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய விடயத்தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு, careers@rdb.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிராத அல்லது பிழையான தகவல்களைக் கொண்டிருக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஆட்சேர்ப்பு படிமுறையின் எக்கட்டத்திலும் எவ்வித முன்னறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும். சிறுபட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைப்பதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கு அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்வதற்கான அதிகாரம் வங்கிக்கே முழுமையாக உரியது.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி.
இல.933, கண்டி வீதி, வெதமுல்லை, களனி.
0112 03 54 54 | www.rdb.lk